**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் செயற்பாடு தொடர்பான நிலை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விளைவுகளது நிதிசார் கூற்றுக்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

வருமானமும் வட்டி வருமானமும் அட்டுறு அடிப்படைக்கு மாறாக கணக்கிலிடப்பட்டிருந்தன. மேலும், கணக்குகளைத் தயாரிக்கையில், நிலையான கோட்பாடு கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இற்கமைய, ஐந்தொகைத் தினத்தில் உள்ளவாறான சொத்து ஒன்றினது நியாயபூர்வமான பெறுமதி அத்தினத்தில் உள்ளவாறான அச்சொத்தினது சந்தைப் பெறுமதியிலும் போதுமானளவு வேறுபடாத விதத்தில் இருப்பதை உறுதிசெய்யும் பொருட்டு போதியளவு கால இடைவெளியில் மீள மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், ஐந்தொகைப் பெறுமதி பூச்சியமாகக் காட்டப்பட்ட போதும் நிறுவனத்தின் பயனுள்ள நடவடிக்கைளுக்குத் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருக்கும் சொத்துக்கள்

பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பன மீளப் பெறுமதியிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சில உதாரணங்கள் கீழே காணப்படுகின்றன.

ரூபா 4,244,850க்குக் கொள்வனவு செய்யப்பட்ட 6 வாகனங்களும் ரூபா 2,418,785 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட நிழற்பிரதி இயந்திரமும் ரூபா 937,755 பெறுமதியான உருக்கினால் ஆன அடுக்கு மேசையும் ரூபா. 3,584,734 பெறுமதியான அலுவலக உபகரணங்களும் இவற்றிடையே காணப்பட்டன.

### 1.2.3 கணக்குகளில் சேர்த்துக்கொள்ளப்படாதவை

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் தாபன விதிக் கோவையினது XIX ஆம் அத்தியாயத்தின் 5.5 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினருக்கு வழங்கப்பட்டுள்ள பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ மனைகளில் கூட்டாக வசிக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து மனை வாடகையாக சம்பளத்தில் 5% அறவிடப்படவேண்டும். எனினும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக, பல்கலைக்கழகத்தின் பதவியணியினரது மனைகளுக்கான குழுவினால் தீர்மானிக்கப்பட்ட முறைக்கேற்ப வாடகை கணிப்பிடப்பட்டு அறவிடப்பட்டமையால் மீளாய்வாண்டில் பல்கலைக்கழகம் பெறவேண்டிய மனை வாடகையான ரூபா. 8,047,170 அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) சஞ்சிசைகளுக்கு வழங்கப்படும் முற்பணம் வலய நூலகத்தை அச்சஞ்சிகைகள் வந்தடைந்ததும் தீர்த்து வைக்கப்பட வேண்டும். எனினும் 1999 முதல் 2009 திசெம்பர் 31 வரை சஞ்சிகைகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட ரூபா. 1,368,211 முற்பணமானது 2010 திசெம்பர் 31 ஆந் திகதியேனும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005க்கு முன்பிருந்தே நிலவிவரும் வழங்கல் கடன்கொடுத்தோர் மீதியாகிய ரூபா 21,013 மீளாய்வாண்டிலேனும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(இ) நான்கு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பபட்ட இடர் கடன் மீதியாகிய ரூபா 552,030 மற்றும் 2 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கணனிக்கடன் மீதியாகிய ரூபா 31,500 என்பன அறவிடமுடியாக் கடன் மீதியென அவதானிக்கப்பட்டது. இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வாகனக் கடன் மீதியாகிய ரூபா. 106,000 மீளாய்வாண்டிலேனும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பெறுமதி ரூபா. 113,150,248 ஆகவுள்ள காணிகளுக்கு உரிய உரித்துறுதி, ரூபா 8,266,742 பெறுமதியான நீர் வழங்கல் திட்டத்தின் சொத்துக்களுக்குரிய பட்டோலை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) அதிகாரச் சட்டங்கள்** | |
| 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் XIII அத்தியாயத்தின் 99(இ) பிரிவு | எத்தோற்றுவாய்களின் மூலமாவதும் ஈட்டப்படும் சகல வருமானமும் நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். எனினும், அவ்விதிகளுக்கு மாறாக 5 கற்கை நெறிகள் மற்றும் ஓர் செயற்திட்டத்தின கீழ் பெறப்பட்ட ரூபா 19,306,246 பல்கலைக்கழக நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருக்க வில்லை. |
| **(ஆ) சுற்றறிக்கைகள்** | |
| (i) 2009 ஏப்ரல் 26 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் | சகல ஊழியர்களும் தாம் வரும் பொழுதும் செல்லும்போதும் தமது கைவிரல் அடையாள இயந்திரத்தைப் பயன்படுத்தவேண்டும். எனினும், |

| | | |
|---|---|---|
| | 09/2009 | பல்கலைக்கழகத்தில் விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | 2008 ஜூலை 28 ஆந் திகதிய பீஈடீ 50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | எரிபொருள் படியைப் பெறும் உத்தியோகத்தர்கள் மேலதிக பயணங்களுக்கு குழாத்திலுள்ள வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு நிறுவனத் தலைவரின் அங்கீகாரத்தைப் பெறாது, குழாத்திலுள்ள வாகனங்களைப் பயன்படுத்தி 1285 கி.மீ தூரப்பயணம் மேற்கொண்டிருந்தனர். |

(இ) **இலங்கை அரசாங்க நிதிப் பிரமாணக் கோவை (நி.பி)**

---

| | | |
|---|---|---|
| (ii) | நி.பி 371(2) | குறித்த வேலைக்கென வழங்கப்படும் இடைக்காலக் கட்டுநிதி வேலை முடிவுற்றதும் தீர்த்து வைக்கப்பட வேண்டும். எனினும் 85 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட சேவை முற்பணமாகிய ரூபா 1,214,072 மற்றும் ஒப்பந்த முற்பணமாகிய ரூபா 4,119,363 என்பன 2010 திசெம்பர் 30 ஆந் திகதியன்றும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன. |
| (ii) | நி.பி 371(2)(ஆ) | இடைக்காலக் கட்டுநிதியாக ஒரு சந்தர்ப்பத்தில் அதிகூடிய தொகையாக வழங்கப்படுவது ரூபா. 20,000 ஆகும். எனினும், அவ்வரம்பை மீறி 10 சந்தர்ப்பங்களில் ரூபா. 722,900 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | நி.பி 571(2) | வைப்பிலிட்ட தினத்திலிருந்து 2 ஆண்டுகள் கடந்துவிட்ட ரூபா. 3,583,124 பெறுமதியான வைப்புகள் |

தொடர்பாக நிதிப் பிரமாணத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (iv) | நி.பி 756 | ரூபா. 82,853,801 பெறுமதியான நூலகப் புத்தகங்களும் ரூபா. 1,037,450,869 பெறுமதியான 4 நிலையான சொத்துக்களும் தொடர்பாக வருடாந்தப் பொருட் கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை. |
| (v) | நி.பி 1646 | நான்கு வாகனங்களைத் தவிர ஏனைய வாகனங்களது 2010 ஆம் ஆண்டிற்கான மாதாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்தப் பொழிப்புகளும் 2011 ஜுன் 30 ஆந் திகதியிலேனும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |

**1.2.7 அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------------------------

விளையாட்டு மைதானத்தைச் சுற்றிவர பக்கத் தூண்களை நிர்மாணிக்கும் வேலைக்கான மதிப்பிடப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா. 7,523,275 ஆகும். அது ரூபா 5 மில்லியன் வரம்பிலும் கூடுதலாக இருப்பதால் i மற்றும் ii என இரு கட்டங்களாக அவற்றைப் பிரித்து திணைக்கள மட்டத்தில் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------------------------------------

**2.1 நிதிசார் மீளாய்வு**

-------------------------------

**2.1.1 நிதிசார் விளைவுகள்**

------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழக நடவடிக்கைகளினது நிதிசார் விளைவுகள் மீண்டுவருஞ் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுப்பதற்கு முன்னனர் ரூபா 419,030,000 பற்றாக்குறையை விளைவித்திருந்தது.

இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 371,446,000 ஆகும். மீண்டுவருஞ் செலவினத்திற்காக அரசாங்கத்திடம் இருந்து பெற்ற ரூபா. 327,535,000 மானியத்தைக் கணக்கிலிலெடுத்ததன் பின்னர் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா. 91,495,000 வரை குறைவுற்றது. இதற்கொப்பாக முன்னைய ஆ்ணடில் மீண்டுவருஞ் செலவினத்திற்காக அரசாங்கத்திடமிருந்து பெற்ற ரூபா. 300,645,000 மானியத்தை சீராக்கல் செய்ததன் பின்னர் அந்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா. 70,801,000 வரை குறைவடைந்திருந்தது. ஆளுக்குரிய வேதனம் ரூபா 20,763,000 ஆலும் பெறுமானத்தேய்வு ரூபா. 28,820,000 ஆலும் அதிகரித்தமையே மீளாய்வாண்டின் பற்றாக்குறை அதிகரிப்பிற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

### 2.2.1 முகாமைத்துவ நலிவு

-----------------------------------------

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கல்விசார் பதவியணியினர் உடன்படிக்கைக் காலம் முடிவுற்ற பின்னரும் விடுதிகளில் தங்கியிருந்தமை தொடர்பாக நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கொள்வனவுக் குழுவினர் பின்னர் வழங்கும் அங்கீகாரத்தின் அடிப்படையில் விடுதிகளின் குத்தகைக் காலம் 3 மாதங்களால் நீடிக்கப்பட்டதாக உபவேந்தர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார்.

(ஆ) நூலகப் புத்தகங்ளை ரூபா. 1,657,667 க்குக் கொள்வனவு செய்கையில் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்படாததுடன் அதில் ரூபா. 768,154 இற்கான கொள்வனவுகளுக்கு உபவேந்தரின் அங்கீகாரம் மாத்திரமே பெறப்பட்டிருந்தது.

(இ) 2007 ஆம் ஆண்டின் உடன்படிக்கையின் பிரகாரம், அவ்வாண்டிலேயே வேலை முடிவுற வேண்டிய ரூப. 10,577,626 பெறுமதியான 7 ஒப்பந்தங்களின் வேலை பூர்த்தியாகதிருந்தமையால், செயற்பாட்டு பிணை முறியிலிருந்து குறித்த பணம் அறவிடப்படாததுடன் உடன்பட்கை மீறலுக்காக சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 செயல் திட்டத்தின் செயற்படுதல்

-----------------------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டிற்குரிய செயல் திட்டத்தின் பிகராரம், நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்படடிருந்த பின்வரும் வேலைகள் முடிவடையாததுடன் கொள்வனவு நாட்காட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| வேலை விடயம் | மதிப்பீட்டு நிதியேற்பாடு | முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டு வந்த மீதி | 2010 ஆம் ஆண்டில் பெறப்பட்ட நிதியேற்பாடு | மொத்த நிதியேற்பாடு | 2010 ஆம் ஆண்டில் உள்ளபடியான செலவினம் | 2010.12.31 இல் உள்ளபடியான செலவிடப்படாது எஞ்சிய தொகை | சேமிப்பு மொத்த நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | % |
| நிர்வாகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 10,000,000 | 590,705 | 6,000,000 | 6,590,705 | - | 6,590,705 | 100.00 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 32,750,000 | 50,626 | 31,000,000 | 31,050,626 | 21,328,125 | 9,722,501 | 31.31 |
| புத்தகங்களும் பிரசுரங்களும் | 10,000,000 | 2,993,701 | 7,000,000 | 9,993,701 | 5,034,600 | 4,959,101 | 49.62 |

கீழே காணப்படும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டில் நிாவாகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குப் பெற்ற தொகையின் மூலம் நிர்மாண வேலை எதுவுமே மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கென ரூபா. 32,750,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு அதில் ரூப.ா 31,000,000 பெறப்பட்டிருந்தது. ரூபா. 21,328,125க்கு மர்திரமே பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எஞ்சிய ரூபா. 9,722,501 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தேவையான நோக்கத்திற்குச் செலவழிக்கப்படாது அத்தொகை எதிர்வரும் ஆண்டிற்கு முன்கொண்டு செல்லப்படுவதாக உபவேந்தர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார்.

(இ) மீளாய்வாண்டில் புத்தகங்களையும் பிரசுரங்களையும் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா. 7,000,000 திறைசேரியிடமிருந்து பெறப்பட்டிருந்த போதிலும் ரூபா 5,034,600 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

### 2.2.3 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

---------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நூலகப் புத்தகங்களைக் கொளவனவு செய்கையில் பெறவேண்டிய கழிவுத் தொகையைப் பெறாமையால் பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா. 410,536 ஆகும்.

(ஆ) கல்விசார் பதவியணியினருக்குப் பெறப்பட்ட விடுதிகளுக்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெற்ற அறிக்கையின் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டிற்குப்பதிலாக மாதாந்த மதிப்பீடு பெறப்பட்டதால் பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 60,000 ஆகும்.

### 2.2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

குளியாப்பிட்டியவை அண்மித்த இடங்களில் மாணாக்கருக்கான 4 விடுதிகளை வாடகைக்குப் பெறுகையில் மாத்திரம் அவற்றின் பெறுமதி ரூபா 963,000 க்கும் மேற்பட்டிருந்தது. எனினும், ஆளுநர் சபையின் உத்தரவைப் பெற்று அதற்கான கொடுப்பனவு வழங்கப்பட்டதாக உபவேந்தர் கணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார். விடுதிகளின் உரிமையாளர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையில் உள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக விடுதிகளைக் கண்காணித்தல், சுத்தப்படுத்துதல், பாதுகாத்தல் போன்றவற்றிற்காக மேலதிகமாக ரூபா. 855,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.5 பயனற்ற செலவினம்

---------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 517,828 செலவில் மாகந்துர வட்டாரத்தில் நிர்மாணிக்கப்பட்ட திறந்த செஸ் விளையாட்டரங்கு 2008 முதல் 2011 ஜுன் வரை பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) ரூபா 63,071 செலவில் மாக்கந்துரவட்டாரத்தில் விலங்கினப் பண்ணை மற்றும் போஷாக்குப் பீடத்தின் தேவைகளுக்காக 2009 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட விலங்கினக் கட்டுப்பாட்டுக் கூறினது – முதலாவது கட்டம் 2010 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்படாதிருந்தது.

### 2.2.6 பட்டப்பின்படிப்புக் கற்கை நெறிகளை நடாத்துதல்

------------------------------------------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பட்டப்பின்படிப்புக் கற்கை நெறிகளுக்கென நடாத்தப்படும் குளியாப்பிட்டிய இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் 2007 திசெம்பர் முதல் இனங்காணப்படாத வைப்பாக ரூபா. 259,500 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் 2010 திசெம்பர் 31 வரை காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்திற்கு வெளியே உள்ள இடமொன்றில் செயலமர்வுகளை நடாத்துவதற்காக முற்பணத்தைப் பெற்று மதிய உணவு மற்றும் தேநீர்ச் செலவினம் என ரூபா. 136,000 செலவிடப்பட்டிருந்தது. அவற்றிற்குரிய விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 மாணாக்கர் ஒருவருக்கான ஆகுசெலவு

-------------------------------------------------------------------

(அ) 2010 ஆம் ஆண்டினது ஒவ்வொரு பீடத்திற்குமான செலவினம் மற்றும் மாணாக்கரது தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வியாபாரக் கல்வி மற்றும் நிதிசார் பீடம் | பிரயோக விஞ்ஞான பீடம் | பெருந்தோட்ட முகாமைத்துவப் பீடம் | விலங்கின கடற்றொழில் போஷணைப் பீடம் |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 2010 ஆம் ஆண்டிற்கான செலவினம் மாணாக்கரது எண்ணிக்கை | 36,210,522 | 44,409,963 | 47,493,277 | 45,811,647 |
| மாணாக்கர் ஒருவரது ஆகுசெலவு | 980 | 407 | 363 | 283 |
| | 36,950 | 109,115 | 130,835 | 161,878 |

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2010 ஆம் ஆண்டின்போது விலங்கின, கடற்றொழில், போஷணை பீடங்களும் பெருந்தோட்ட முகாமைத்துவப் பீடத்திலும் மாணாக்கர் ஒருவரது ஆகுசெலவு மாணாக்கரது எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் பெருமளவு அதிகரித்திருந்தது.

(ii) மாக்கந்துர பீடங்கள் இரண்டிற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணாக்கரில் பலர் வேறு பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் போக்கு தென்பட்டது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| | | பதிவு செய்யப்பட்ட மாணாக்கரின் எண்ணிக்கை | வேறு பல்கலைக் கழகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற மாணாக்கரின் எண்ணிக்கை | சதவீதம் % |
|---|---|---|---|---|
| விலங்கின | 2007 | 63 | 30 | 47.61 |
| கடற்றொழில் | 2008 | 62 | 16 | 25.80 |
| போஷணை | 2009 | 88 | 19 | 21.59 |

| | | | | |
|---|---|---|---|---|
| விஞ்ஞானபீடம் | 2010 | 143 | 38 | 26.57 |
| பெருந்தோட்ட முகாமைத்துவம் | 2007 | 94 | 14 | 14.89 |
| | 2008 | 111 | 24 | 21.62 |
| | 2009 | 131 | 32 | 24.42 |
| | 2010 | 156 | 37 | 23.71 |

**(ஆ) மாணாக்கரை ஆட்சேர்த்தல்**

-------------------------------------------------

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவம் போஷணை, விலங்கின வளம், கடற்றொழில் மற்றும் வீட்டுத்தோட்டம் ஆகிய பீடங்களில் கல்விசார் நடவடிக்கைகள் ஆரம்பித்த காலந்தொட்டு 63 மாணாக்கர் பங்குபற்றாது போனமை மற்றும் பிரயோக விஞ்ஞான பீடத்தில் 22 மாணாக்கர் பங்குபற்றாது போனமை என்பன உபவேந்தரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும், குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாணாக்கரை ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, ஈடுபடாததால் அங்கீகரிக்கப்பட்ட மாணாக்கர் எண்ணிக்கையை விடக் குறைவான எண்ணிக்கையிலான மாணாக்கரே கல்விசார் நடவடிக்கைளில் ஈடுபட்டிருந்தனர்.

**2.2.8 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---------------------------------------

வருடாந்த பாதீடு பயனுள்ள நிதிசார் முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராததமை கீழே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(அ) முப்பத்தொரு மாணாக்கருக்கு கூடிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பதின்மூன்று விடயங்களில் பாதிட்டு ஏற்பாட்டிலும் கூடுதலாக செலவினம் ஏற்பட்டிருந்தது.

(இ) நான்கு விடயங்களுக்கு ஏற்பாடு செய்த நிதி முற்றாகச் செலவிடப்படதிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகள் சம்பந்தமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் உபவேந்தரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நூலகப் புத்தகங்களைக் கொள்வனவு செய்தல்

(ஆ) நிர்மாணவேலை ஒப்பந்தம்

(இ) கணக்கீடு

(ஈ) முற்பணம்

(உ) வெளியகக் கற்கைநெறி

(ஊ) கையிருப்புக் கட்டுப்பாடு

(எ) ஆளணியினர்

(ஏ) பாதீடு

(ஐ) கொள்வனவு